(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **43**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 ஒக்டோபர் 25, வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ எட்வட் குணசேகர,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொலைத்தொடர்புகள் , டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திறண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க** சமூக வலுவூட்டல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ முத்து சிவலிங்கம்,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர

கௌரவ எஸ். எம். சந்திரசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மலித் ஜயதிலக

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ எம்.எஸ். தௌபீக்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ திலங்க சுமதிபால**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்களை விடுத்தார்:—

I

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'பயங்கரவாத எதிர்ப்பு' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எட்டு மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

II

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2018 ஒக்டோபர் 22 ஆம் திகதி 'இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகம்' எனும் சட்டமூலத்தில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**2. பத்திரங்களைச் சமர்ப்பித்தல்**: (1) சபாநாயகர், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 54 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் பிரிவு 34 இன் பிரகாரம் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் அவதானிப்புகளுடன் கூடிய தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டினைச் சமர்ப்பித்து மேற்படி மதிப்பீட்டினை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் **154(6)** ஆம் உறுப்புரையின் பிரகாரம் -

(i) 2014 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXVII மற்றும் XXVIII ஆம் பகுதிகளையும் மூன்றாவது தொகுதியின் XIII பகுதியையும்;

(ii) 2016 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXII ஆம் பகுதியையும் மூன்றாவது தொகுதியின் X ஆம் பகுதியையும்; மற்றும்

(iii) 2017 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் I ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் அமைச்சரவை அலுவலகத்தின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான நீதிச் சேவைகள் ஆணைக்குழுச் செயலகத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டினை சமர்ப்பித்து மேற்படி குறைநிரப்பு மதிப்பீட்டினை அரச நிதி பற்றிய குழுவிற்கும் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி பணிகள் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 1995 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தவறாளர்களை ஒப்படைத்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 2091/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்து மேற்படி கட்டளையை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) வலுவாதார அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி சார்பாக கௌரவ நிஹால் கலப்பத்தி அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iii) 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் வருடாந்த அறிக்கைகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) அரசாங்க நிதி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ எம். ஏ. சுமந்திரன் அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளைகள்; மற்றும்

(ii) தீவிர பொறுப்பு முகாமைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) உக்குவளை, தவலன்கொய, இல.149/8 இல் வதியும் திரு. ஜே.எம்.பீ.பி. விஜேரத்னவினது 2018.06.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மாத்தளை, களுதேவல, சுதுகங்க தோட்டம், முதலாம் ஒழுங்கை எனும் முகவரியில் வதியும் திரு. கே.ஜி. புண்ணியசிரியினது 2018.06.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) கிம்பிஸ்ஸ, சீகிரிய வீதி, ரணவிரு மாவத்தையில் வதியும் செல்வி எம்.ஏ. பிரியங்கா மல்காந்தியினது 2018.07.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) மாத்தளை, பலாபத்வல, கவடயாமுன, இல.145 இல் வதியும் திரு. பி.எம்.எஸ்.ஆர். தேசப்பிரியவினது 2018.06.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே சமர்ப்பித்தார்.

(2) அம்பேபுஸ்ஸ, கீனதெனிய, இல.56/3 இல் வதியும் திரு. எம்.பி.எஸ். பிரியங்கரவினது 2018.09.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

(3) லுணுகம்வெஹெர, புதிய நகரம், இல. 38 இல் வதியும் திரு. சுதுசிங்ஹ அபேசுந்தரவினது 2018.09.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுசந்த புஞ்சிநிலெமே சமர்ப்பித்தார்.

(4) மஹரகம, கொடிகமுவ, யஹம்பத் மாவத்தை, இல. 21 இல் வதியும் திருமதி கே.எம்.ஜி.சி. தர்மரத்னவினது 2018.09.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எஸ்.எம். மரிக்கார் சமர்ப்பித்தார்.

30 (10) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. கடன் இணக்கம் (திருத்தம்) :** *நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,—* (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

மேற்படி சட்டமூலம் 2018 நவம்பர் 05 ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 2018 நவெம்பர் 07 ஆம் திகதி புதன்கிழமை, 08 ஆம் திகதி வியாழக்கிழமை, 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 10 ஆம் திகதி சனிக்கிழமை, 12 ஆம் திகதி திங்கட்கிழமை, 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 14 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2019)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வுகள் (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 75(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2019)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2018 நவெம்பர் 07 ஆம் திகதி புதன்கிழமை, 08 ஆம் திகதி வியாழக்கிழமை, 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 10 ஆம் திகதி சனிக்கிழமை, 12 ஆம் திகதி திங்கட்கிழமை மற்றும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய ஒதுக்கப்பட்ட நாட்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும், பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையும் இருக்குமாக:

ஆயினும், பி.ப. 7.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 8(5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அமர்வுகள் ( இல. 2) :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 75(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2019)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2018 நவெம்பர் 14 ஆம் திகதி புதன்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணிவரையும், பி.ப 1.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3 ) :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 8 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும், 2018.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப.12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு 8(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. நிதிச் சட்டமூலம்** : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"இச் சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சார்பாக அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

(மு.ப. 11.06 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ பியங்கர ஜயரத்ன தலைமை தாங்குவாராக" என அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.03 மணிக்கு கௌரவ செஹான் சேமசிங்க தலைமை தாங்கினார்.)

"கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்குவாராக" என வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.41 மணிக்கு கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்குவாராக" என தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.06 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப் பாராளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

தலைமை தாங்கும் உறுப்பினர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் வாசகம்

1 ஆம் பக்கத்தில் 8 முதல் 10 வரையிலான ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

> "2. (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II (உல்லாசப் பயண";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 3 ஆம், 4 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2018, திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கு,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 10 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "ஆயின், மேலும், 2019, சனவரி 1 ஆந்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 22 ஆம், 23 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "(2) இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியிலிருந்தும் அதன் பின்னரும்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 26 முதல் 29 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

> “அறவீட்டை, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொடரினைச் சுற்றுலாப்பயணத் தொழிற்படுத்துநர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அறவீடு மற்றும் 11 ஆம் பிரிவின்கீழ் 0.5 சதவீதம் என்ற வீதத்தில் சேகரிக்கப்பட்ட அறவீடுதவிர,”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் பக்கத்தில் 1 முதல் 4 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> “(ஆ) இரண்டாயிரத்தைந்தாமாண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொடரிணைச் சுற்றுலாப் பயணத் தொழிற்படுத்துநர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அறவீட்டை மற்றும் 11 ஆம் பிரிவின்கீழ் 0.5 சதவீதம் என்ற வீதத்தில் சேகரிக்கப்பட்ட அறவீட்டைத் திரட்டு நிதியத்துக்கு அனுப்புதல் வேண்டும்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 முதல் 10 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

11 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 13 ஆம் 14 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

> “ளுக்குப் பதிலாக, “அதன் முதலாவது பதிவாண்டு 2019, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் வருமிடத்து, (ஓரளவு)”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"பதிவாண்டு 2019, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 5 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"பதிவாண்டு 2019, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் வரு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 .ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"கொடுப்பனவு வருமதியாகவுள்ள தேதி 2019, சனவரி 1 ஆந்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 .ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"யாகவுள்ள தேதி 2019, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் வரு";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

16 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 30 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"வருமதியாகவுள்ள தேதி 2019, சனவரி 1 ஆந் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

17 .ஆம் வாசகம்

10 ஆம் பக்கத்தில் 4 முதல் 23 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 .ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 6 முதல் 10 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தின் பாகம் VII ஐ நீக்குதல்.

17. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) 2015 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் VII (மாளிகை வரி) இத்தால் நீக்கப்படுகின்றது."

"மீது முதலாவது பதிவாண்டு இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான தேதியன்று அல்லது அதன்பின்னர் வருகின்றதோ குறித்துரைக்கப்பட்ட அந்த ஒவ்வொரு மோட்டார் வாகனத்தின்மீதும் மற்றும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்மூலம் விதித்துரைக்கப்படக் கூடியவாறான வீதங்களிலும் விதிக்கப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 .ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 11 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"20. (1) பத்தொன்பதாம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

21 .ஆம் வாசகம்

11 ஆம் பக்கத்தில் 26 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

> "21. (1) பத்தொன்பதாம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இலங்கையி";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

22 முதல் 24 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

25 .ஆம் வாசகம்

14 ஆம் பக்கத்தில் 2 ஆம், 3 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

> "தேதியிலிருந்து தொடங்குகின்றதும் ஆனால் 2019, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

14 ஆம் பக்கத்தில் அதன் ஓரக் குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமோரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "2016, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் 2019, சனவரி 1 ஆந் தேதி வரையிலானதுமான காலப் பகுதிக்கான அறவீட்டைச் சேகரித்தல். ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

26 .ஆம் வாசகம்

15 ஆம் பக்கத்தில் 19 ஆம், 20 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

> "26. (1) எந்த வாகனம் தொடர்பிலான கடன் பத்திரம் 2019, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் திறக்கப்பட்டு அவ்வாகனம் இலங்கையினுள் இறக்குமதி செய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் வாகனத்தின்மீது 2019, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது ";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

15 ஆம் பக்கத்தில் அதன் ஓரக் குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> “2019, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப் பகுதிக்காக அறவீட்டைச் சேகரித்தல்.”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

27 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

28 ஆம் வாசகம்

16 ஆம் பக்கத்தில் 13 முதல் 27 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"செல்லுபடியாக்குதல்

28. ஒரு மோட்டார் வாகனத்தை இறக்குமதிசெய்யும் எவரேனுமாளிடமிருந்து, 2016, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி, ஆணையாளர் தலைமையதிபதியின் சார்பில் 24 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய தொகையினதான அறவீடொன்று ஒரு வங்கியினால் சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சேகரிப்பானது, எல்லா நோக்கங்கங்களுக்காகவும் செல்லுபடியானமுறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுகின்றதாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் வங்கிக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாத

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

29 ஆம் மற்றும் 30 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

31 ஆம் வாசகம்

17 ஆம் பக்கத்தில் 18 ஆம், 19 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"31. (1) இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2016, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான ஆண்டுக்காக, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

18 ஆம் பக்கத்தில் 4 முதல் 10 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"(2) அறவீடானது கம்பெனிகள் பதிவாளரினால் 2019, திசெம்பர் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு இயைபான கம்பெனியிடமிருந்து சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் திரட்டு நிதியத்துக்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

32 ஆம் வாசகம்

18 ஆம் பக்கத்தில் 16 முதல் 21 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"எவ்வாறிருப்பினும், 2016, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் 2016, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியினுள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனி, அறவீட்டைச் செலுத்துவதற்குப் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

33 ஆம் மற்றும் 34 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

35 ஆம் வாசகம்

19 ஆம் பக்கத்தில் 18 முதல் 20 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"செல்லுபடியாக்குதல்

35. இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பெனியிடமிருந்து, 2016, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி, 31 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய தொகையினதான அறவீடொன்று கம்பெனிகள் பதிவாளரினால் இப்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காக சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சேகரிப்பானது, செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுகின்றதாகவும் எல்லா நோக்கங்களுக்குமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் கம்பெனிகள் பதிவாளருக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும்

36 ஆம் வாசகம்

19 ஆம் பக்கத்தில் 23 ஆம், 24 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"36. (1) இரண்டாயிரத்துப் பதினெட்டாமாண்டு ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்றதும் ஆனால் 2021, திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான ஒவ்வொரு மாதத்துக்காகவும், ஒவ்வொரு நிதி நிறுவனத் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 1 முதல் 6 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

"(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, நிதிச்சேவைகளின் வழங்குகைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான பெறுமதி சேர்ப்பு, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 25இ என்னும் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் நிதிச்சேவைகளின் வழங்குகைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான பெறுமதிச் சேர்ப்பைக் கணக்கிடுவதற்காகக் கவனத்துட் கொள்ளப்பட்ட நிதி நிறுவனத்தின் தொழிற்பாட்டு இலாபத்தின் அல்லது நட்டத்தின் தொகையானது, இப்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரியையும், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 25அ என்னும் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான சேர்பெறுமதி வரியையும், 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டத்தின் (2) ஆம்

> உட்பிரிவின் (iii) ஆம் பந்தியின்கீழ் செலுத்தப்படற்பாலதான நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியையும் கழிப்பதற்குமுன்னர் அத்தகைய நிதி நிறுவனத்தின் இலாபத்தினது அல்லது நட்டத்தினது தொகையாதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

20 ஆம் பக்கத்தில் 8 முதல் 10 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "அடுத்துப் பின்வரும் மாதத்தின் இருபதாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் அத்தகைய அனுப்புதொகை தொடர்பிலான பெறுமதி சேர்ப்புக் கூற்றுடன் சேர்த்து,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

20 ஆம் பக்கத்தில் 12 முதல் 16 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

> "(4) நிதிநிறுவனமொன்று, அத்தகைய நிதிநிறுவனத்தின் ஒவ்வொரு நிதியாண்டு தொடர்பிலும், அந்நிதியாண்டின் முடிவிலிருந்து ஆறுமாத காலப்பகுதியினுள் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் விபரத்திரட்டொன்றைக் ";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

37 ஆம் மற்றும் 38 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

39 .ஆம் வாசகம்

21 ஆம் பக்கத்தில் 19 ஆம், 20 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

> "(ஆ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித் தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு நிதிக் கம்பெனி,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

40 ஆம் வாசகம்

21 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

"40. (1) இரண்டாயிரத்துப் பத்தொன்பதாமாண்டு சனவரி 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்ற'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

41 முதல் 43 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

44 .ஆம் வாசகம்

23 ஆம் பக்கத்தில் 28 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

''(3) (அ) எவரேனும் செல்லிடத் தொலைபேசித் தொழிற்படுத்து நரினால் சொந்தமாக வைத்திருக்கப்படாத ஏதேனும் செல்லிடத் தொலைபேசிக் கோபுரம் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான அறவீடு, அச்செல்லிடத் தொலைபேசிக் கோபுரத்தைப் பயன்படுத்துகின்ற செல்லிடத் தொலைபேசித் தொழிற்படுத்துநரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) செல்லிடத் தொலைபேசிக் கோபுரம், ஒன்றுக்கு மேற்பட்ட செல்லிடத் தொலைபேசித் தொழிற்படுத்துநர்களினால் பயன்படுத்தப்படுமிடத்து, அந்த அறவீடானது, சமமான பங்குகளில் அத்தகைய செல்லிடத் தொலைபேசித் தொழிற்படுத்துநர்களினால் செலுத்தப்படுதல் வேண்டும். '';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

45 ஆம் வாசகமும் 46 ஆம் வாசகமும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

47 ஆம் வாசகம்

25 ஆம் பக்கத்தில் 8 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

'' ''செல்லிடத் தொலைபேசிக் கோபுரம்'' என்பது,'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

48 ஆம் வாசகம்

25 ஆம் பக்கத்தில் 20 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுமாறு நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்,—

''48. (1) இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு சனவரி 1ஆந் தேதியிலிருந்து செல்லிடத்'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என்ற பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற" பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

49 முதல் 52 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

முதலாம் அட்டவணை

''முதலாம் அட்டவணை சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற'' பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இரண்டாம் அட்டவணை

''இரண்டாம் அட்டவணை சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற'' பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மூன்றாம் அட்டவணை

''மூன்றாம் அட்டவணை சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற'' பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது திருத்தங்களுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் திருத்தமொன்றைப் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1):** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மே 31 ஆம் திகதிய 2073/41 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2):** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 08 ஆம் திகதிய 2074/39 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3 ):** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 14 ஆம் திகதிய 2075/51 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.09.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. ஒத்திவைப்பு (பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்தல்) :** "இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபைத் தலைவர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப் பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்குவாராக" என அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.57 மணிக்கு "கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன தலைமை தாங்கினார்.)

"கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்குவாராக" என அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.17மணிக்கு "கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம், பி.ப.5.09 மணிக்கு பராளுமன்றம், 2018 ஒக்டோபர் 26, வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.